செய்தி வெளியீடு எண்.45/2016 நாள்: 21.06.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 13 வட்டத்திலும், மின் ஆளுமை திட்டத்தின் கீழ் 1,44,186 ஜாதி சான்றிதழ்களும், 1,45,712 இருப்பிடச் சான்றிதழ்களும், 2,08,130 வருமானச் சான்றிதழ்களும், 11,766 முதல் பட்டதாரி சான்றிதழ்களும் மற்றும் சமூகநலத்துறை சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகத்திலும், காணை குறுவட்ட வருவாய் ஆய்வர் அலுவலகத்திலும் தலா ஒரு பொது இ—சேவை மையம் மின் ஆளுமைச் சங்கம் மூலம் கடந்த 26.02.2014 அன்று முதல் வருவாய்த்துறையினால் வழங்கப்பட்டு வரும் சான்றிதழ்கள்

1. சாதி சான்றிதழ்
2. வருமான சான்றிதழ்
3. இருப்பிட சான்றிதழ்
4. முதல் பட்டதாரிசான்றிதழ்
5. கணவனால் கைவிடப்பட்ட பெண் சான்றிதழ்

பின்னர் இச்சேவையினை மாவட்ட முழுமைக்கும் விரிவுபடுத்திட ஏதுவாக இணைப்பதிவாளர் கூட்டுறவுத்துறை அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் செயல்பட்டு வரும் கிராமப்புற வறுமை ஒழிப்பு கட்டமைப்பு மையங்கள் ஆகியவற்றின் மூலம் பொது இ—சேவை மையங்கள் வட்டவாரியாக நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

விழுப்புரம் வட்டத்தில் 76 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 25223 மனுக்கள் பெறப்பட்டு 21343 சான்றிதழ்களும், 25828 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 24538 சான்றுகளும், 17129 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 16379 இருப்பிடச் சான்றுகளும், 1689 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1352 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

திண்டிவனம் வட்டத்தில் 34 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 20606 மனுக்கள் பெறப்பட்டு 17435 சான்றிதழ்களும், 24141 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 22741 சான்றுகளும், 16754 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 15760 இருப்பிடச் சான்றுகளும், 1326 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1115 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் 95 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 13428 மனுக்கள் பெறப்பட்டு 11957 சான்றிதழ்களும், 21464 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 20773 சான்றுகளும், 15260 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 14904 இருப்பிடச் சான்றுகளும், 1744 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1491 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கோயிலூர் வட்டத்தில் 24 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 20637 மனுக்கள் பெறப்பட்டு 16476 சான்றிதழ்களும், 22868 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 21204 சான்றுகளும், 15901 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 14862 இருப்பிடச் சான்றுகளும், 1424 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1304 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

செஞ்சி வட்டத்தில் 27 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 18726 மனுக்கள் பெறப்பட்டு 15831 சான்றிதழ்களும், 25090 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 23660 சான்றுகளும், 17911 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 17170 இருப்பிடச் சான்றுகளும், 1256 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1062 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வானூர் வட்டத்தில் 76 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 9486 மனுக்கள் பெறப்பட்டு 8136 சான்றிதழ்களும், 11314 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 10688 சான்றுகளும், 8914 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 8599 இருப்பிடச் சான்றுகளும், 888 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 730 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

விக்கிரவாண்டி வட்டத்தில் 24 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 14183 மனுக்கள் பெறப்பட்டு 12235 சான்றிதழ்களும், 14372 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 13294 சான்றுகளும், 8947 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 8437 இருப்பிடச் சான்றுகளும், 1003 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 674 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

சங்கராபுரம் வட்டத்தில் 42 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 18364 மனுக்கள் பெறப்பட்டு 13103 சான்றிதழ்களும், 27760 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 25212 சான்றுகளும், 16785 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 15145 இருப்பிடச் சான்றுகளும், 2192 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1417 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

உளுந்தூர்பேட்டை வட்டத்தில் 27 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 20570 மனுக்கள் பெறப்பட்டு 15564 சான்றிதழ்களும், 25569 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 24015 சான்றுகளும், 18269 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 17251 இருப்பிடச் சான்றுகளும், 1516 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1002 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

சின்னசேலம் வட்டத்தில் 78 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 9186 மனுக்கள் பெறப்பட்டு 7000 சான்றிதழ்களும், 15866 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 14945 சான்றுகளும், 12404 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 11646 இருப்பிடச் சான்றுகளும், 1481 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 1195 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

மரக்காணம் வட்டத்தில் 11 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 4321 மனுக்கள் பெறப்பட்டு 3419 சான்றிதழ்களும், 5244 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 4781 சான்றுகளும், 3777 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 3462 இருப்பிடச் சான்றுகளும், 222 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 147 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேல்மலையனூர் வட்டத்தில் 11 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 788 மனுக்கள் பெறப்பட்டு 616 சான்றிதழ்களும், 1132 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 1001 சான்றுகளும், 1050 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 925 இருப்பிடச் சான்றுகளும், 2124 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 81 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கண்டாச்சிபுரம் வட்டத்தில் 9 இ பொது சேவை மையங்களின் மூலம் 1.12.2014 முதல் 15.06.2016 வரை சாதிசான்றிதழ் தொடர்பாக 1332 மனுக்கள் பெறப்பட்டு 980 சான்றிதழ்களும், 1655 வருமானச் சான்று மனுக்கள் பெறப்பட்டு, 1278 சான்றுகளும், 1446 இருப்பிடச் சான்று மனுக்கள் பெறப்பட்டு 1172 இருப்பிடச் சான்றுகளும், 275 முதல் பட்டதாரி சான்றுகளில் மனுக்கள் பெறப்பட்டு 196 சான்றுகளும், ஆதரவற்ற விதவை மனுக்கள் பெறப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 2015 –16ம் ஆய்வின்படி முதன்முறையாக பள்ளிகளிடையே மின் சான்று வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டு 73386 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 61183 சான்றுகளை பள்ளிகள் மூலமாக இலவசமாக வழங்கப்ட்டுள்ளன.

மேலும் சமூக நலத்துறையினரால் வழங்கப்படும் பின்வரும் சேவைகளும் இ சேவை மையங்கள் வாயிலாக விண்ணப்பிக்கப் பெற்று பொதுமக்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

<u>இ சேவை மையத்தின் மூலம் சமூக நலத்துறையின் வாயிலாக வழங்கப்படும் சான்றிதழ்கள்</u>

1. மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்
2. டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதி உதவித் திட்டம்
3. ஈ.வெ.ரா. மணியம்மை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம்
4. டாக்டர். தர்மாம்பாள் விதவை மறுமணம் திருமண நிதி உதவித் திட்டம
5. அன்னை தெரசா அம்மையாரின் ஆதரவற்ற மகள் திருமண நிதி உதவித் திட்டம்

இச்சேவை மேற்கண்ட இ – சேவை மையங்கள் மூலமாக விழுப்புரம் வட்டத்திற்கான 22 வட்டாரங்களில் 14 பேரூராட்சிகள், 3 நகராட்சிகளிலும் உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில் முதலாவதாக மூவலூர் ராமமிர்தம் அம்மையார் நினைவு நிதி உதவித்திட்டத்தின் கீழ் 10473 மனுக்கள் பெறப்பட்டு 4486 மனுக்கள் தகுதியுள்ளதாக ஏற்பளிக்கபபட்டுள்ளன. முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 194 மனுக்கள் பெறப்பட்டு 102மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. திரு. ஈ.வெ.ரா. மணியம்மை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டதின் கீழ் 265 மனுக்கள் பெறப்பட்டு 94 மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. அன்னை தெரசா அம்மையாரின் ஆதரவற்ற மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 67 மனுக்கள் பெறப்பட்டு 30 மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டள்ளன.

இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதலாவதாக திட்டத்தின் 27 மனுக்களும் 2வது திட்டத்தின் கீழ் 629 மனுக்களும் பெறப்பட்டு முறையே 17 மற்றும் 464 மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

மேலும் மின் மாவட்ட இ – சேவை மையங்களின் மூலமாக இணைய வழி பட்டா மாறுதல் திட்டம் 01.10.2015க்கு துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விழுப்புரம் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 513 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 778 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 237 மற்றும் 147 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

திண்டிவனம் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 719 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 1582 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 314 மற்றும் 457 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 1352 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 1162 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 614 மற்றும் 149 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

திருக்கோயிலூர் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 667 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 521 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 309 மற்றும் 71 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

செஞ்சி வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 560 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 523 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 135 மற்றும் 11 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

வானூர் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 808 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 1692 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 314 மற்றும் 457 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

விக்கிரவாண்டி வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 448 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 347 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 81 மற்றும் 35 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

சங்கராபுரம் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 1350 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 1413 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 367 மற்றும் 202 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 857 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 602 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 163 மற்றும் 27 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

சின்னசேலம் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 1319 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 658 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 621 மற்றும் 61 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

மரக்காணம் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 177 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 405 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 20 மற்றும் 8 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

மேல்மலையணூர் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 146 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 151 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 1 மற்றும் 3 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

கண்டாச்சிபுரம் வட்டத்தில் உட்பிரிவு அல்லாதது 133 மனுக்களும் உட்பிரிவுக்குட்பட்ட 170 மனுக்களும் பெறப்பட்டு முறையே தலா 6 மற்றும் 27 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இ சேவை மையங்கள் மூலமாக மின் கட்டணம் நகராட்சிகள், குடிநீர் வரி உள்ளிட்ட இதர சேவைகளும், அண்ணா பல்கலைகழக தொழில்நுட்ப கல்விக்கான விண்ணப்பங்களை இணைய வழி விண்ணப்ப படிவம் பொது சேவை மையங்களில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பட்டா, சிட்டா, ‘அ’ பதிவேடு நகல் எடுத்து வழங்கப்பட்டு வருகிறது. சென்னை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிர்வாகத்தின் மூலமாக இத்திட்டம் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இ—சேவைக்கென பொதுமக்களிடமிருந்து, வருவாய்த்துறை சான்றுகள் பெற தலா ரூ.50/—ம், சமூகநலத்துறை சேவைக்கட்டணமாக தலா ரூ.100/—ம். இணைய வழி பட்டா மாறுதலுக்கு சேவைக் கட்டணம் மனு 1க்கு ரூ.50/—ம் ஆக சேவைக்கட்டணங்களாக வசூலிக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் பேருந்து, இரயில் பயண கட்டணம், அலைச்சல் ஏதுமின்றியும், ஒவ்வொரு பணிக்கும் சம்பந்தபட்ட அலுவலர்களை தனித்தனியே நேரில் சந்தித்து தீர்வு பெறும் நேரமும் காலமும் மிச்சப்படுத்தப்படுகிறது.

அந்தந்த இ—சேவை மையங்களை பயன்படுத்தி, பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

———————————————————————————————————

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.